1987 ஏப்ரல் 20]

புதிய தேயிலை தொழிற்சாலை.

414—(*வினா எண் 12369) திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக தேயிலை தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஆம்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக அமைக்கப்படும் தேயிலைத் தொழிற்சாலைகள் எந்தெந்த மாவட்டங்களில் அமைக்கப்படும் என்ற விவரத்தையும், அதன் மதிப்பீட்டுத் தொகை என்ன என்பதையும், அதன்மூலம் எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்ற விவரத்தையும் அறிவிக்குமாறு நான் கோருகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் உதகை வட்டத்தில் சின்னக்கோரை என்ற பகுதியில் ஒரு தொழிற்சாலையும், நீலகிரி மாவட்டத்தில் பிகட்டி என்ற பகுதியில் இன்னொரு தொழிற்சாலையும் அமைப்பதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் 50 பேர் பணியாற்றுவதற்கான வாய்ப்பு இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாநில அரசின் சார்பாக இரண்டாம் பகுதித் திட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டு முதல் தொழிற்சாலைக்கு 7.62 லட்சம் ரூபாயும், இரண்டாம் தொழிற்சாலைக்கு 9.52 இலட்சம் ரூபாயும் பங்குத் தொகையாக வழங்கப்பட்டிருக்கிறது. தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திலிருந்து ஒவ்வொன்றுக்கும் முறையே 109 இலட்சம் ரூபாய் அளிக்க ஒப்புதல் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. த. மாரிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேயிலையின் மொத்த அளவு என்ன, அது எந்தத் துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப் படுகிறது, அதன் மூலம் எவ்வளவு இலாபம் கிடைக்கிறது, 1984-85, 1986-86 ஆகிய ஆண்டுகளில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு என்ன என்ற முழு விவரங்களையும் அறிவிக்குமாறு நான் வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 1985-ம் ஆண்டில் ஏலத்தின் மூலம் விற்பனை செய்யப்பட்டு, ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மொத்த அளவு இரண்டு கோடியே 58 லட்சத்து 34 ஆயிரம் கிலோ, 1986 ஆம் ஆண்டில் ஒரு கோடியே 73 லட்சத்து 95.364 கிலோ ஏற்றுமதி செய்யப்பட் டிருக்கிறது. இந்த விவரம்தான் இப்போது என்னிடத்தில் இருக்கிறது. இலாப நஷ்டக் கணக்கு என்ன என்பதற்கு தற்போது விவரம் இல்லை.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, புதியதாக நீலகிரி மாவட்டத்தில் சின்னக்கோரையிலும், பெக்கட்டி பகுதியிலும் தேயிலைத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கவிருப்பதற்கு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சின்னக்கோரைப் பகுதியில் தொழிற்சாலைக்கு வேண்டிய கட்டடங்கள் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. ஆனால் பெக்கட்டி பகுதியில் தொடங்கப்படும் பாக்டரி பொறுத்து சில தகராறு காரணமாக பணிகள் தொடங்கப் படவில்லை. ஆகவே இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக அந்தத் தேயிலைத் தொழிற்சாலையின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அதிலே இருக்கிற தகராறு பற்றி இதுவரையில் எனக்குத் தெரிய வில்லை. அப்படி பிரச்னை இருக்குமானால் நிச்சயம் தலையிட்டு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 20]

திரு. கே. கல்லன்: தலைவர் அவர்களே, அந்த பகுதி பொது மக்கள் ஏறக்குறைய இரண்டு ஏக்கர் பூமியை வாங்கி சர்க்காருக்குக் கொடுத்தும், இந்தத் தொழிற்சாலையின் வேலை துவக்கப் படவில்லை. இதனைத் துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளிடம் தெரிவித்து நடவடிக்கையெடுக்கச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நிலம் வாங்கிக் கொடுத்திருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அங்கே ஏதோ சிக்கல் இருப்பதாக மாண்புமிகு உச்சி அவர்கள் சொல்கிறார்கள். என்ன சிக்கல் இருக்கிறது என்று பார்த்து துரித நடவடிக்கையெடுக்கப்படும். சிக்கல் என்னவென்று யாருக்கும் தெரியவில்லை. அதுவே சிக்கலாக இருக்கிறது. அதிகாரிகளிடம் கலந்து பேசி நடவடிக்கை யெடுக்க ஏற்பாடுகளைச் செய்யலாம்.

தூத்துக்குடி வானொலி நிலையம்.

415—(*வினா எண். 6856) **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்குமாறு மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்தி வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தூத்துக்குடியில் வானொலி நிலையம் அமைக்கப்பட உள்ளது.

(ஆ) இவ்வானொலி நிலையம் அமைப்பதற்காக தேவைப் படும் நிலத்தை கையகப்படுத்தி வழங்குமாறு மத்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க மாநில அரசு நடவடிக்கை மேற் கொண்டு வருகிறது.